# 2025 GROUP 4

# NEW SYLLABUS

# இலக்கணம்

# TOPIC WISE

# INDEX

## 2025 GROUP 4 NEW SYLLABUS

## இலக்கணம் TOPIC WISE


| வ.எண் | தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | அடிப்டை தமிழ் எழுத்துக்கள் | 1-8 |
| 2 | இன எழுத்துக்கள்ளள | 9-12 |
| 3 | சுட்டெழுத்துக்கள் | 13-21 |
| 4 | மொழி முதல் இறுதி எழுத்துக்கள் | 22-27 |
| 5 | எழுத்துக்களின் பிறப்பு | 28-37 |
| 6 | சார்பெழுத்துகள் | 38-79 |
| 7 | அகரவரிசை | 80-84 |
| 8 | ஓரெழுத்து ஒருமொழி | 85-86 |
| 9 | இருதிணை,ஐம்பால்,மூவிடம் | 87-98 |
| 10 | நால் வகைச்சொற்கள் | 99-106 |
| 11 | இலக்கியவகைச்சொற்கள் | 107-115 |
| 12 | அறுவகைப் பெயர்ச்சொற்கள் | 116-123 |
| 13 | இடுகுறிப்பெயர், காரணப்பெயர் | 124-129 |
| 14 | பண்புப்பெயர்,தொழிற்பெயர் | 130-142 |
| 15 | இடைச்சொல்,உரிச்சொல் | 143-147 |
| 16 | பகுபதம், பகாப்பதம் | 148-170 |
| 17 | வல்லினம் மிகும் மிகா இடங்கள் | 171-202 |

| | | |
|---|---|---|
| 18 | மயங்கொலிகள் | 203-218 |
| 19 | வேற்றுமை | 219-243 |
| 20 | தொகை தொகா நிலைத் தொடர்கள் | 244-267 |
| 21 | ஆகுபெயர் | 268-286 |
| 22 | வினைமுற்று | 287-299 |
| 23 | எச்சம் | 300-312 |
| 24 | வாக்கியவகைகள் | 313-341 |
| 25 | வினா,விடை வகைகள் | 342-348 |
| 26 | மரபுத் தொடர்கள் | 349-359 |
| 27 | மரபுப் பெயர்கள் | 360-370 |
| 28 | இணைச்சொற்கள் | 371-376 |
| 29 | தொகைச்சொற்கள் | 377-381 |
| 30 | ஒருமை,பன்மை | 382-390 |
| 31 | உவமை -உருவகம் | 391-394 |
| 32 | பிறமொழிச் சொல் தமிழ்ச் சொல் | 395-405 |
| 33 | மூவகை மொழிகள் | 406-408 |
| 34 | வழக்கு | 409-417 |
| 35 | வழு,வழா& வழுவமைதி | 418-428 |
| 36 | மூவகைப் போலிகள். | 429-436 |
| 37 | பேச்சு வழக்கு எழுத்து வழக்கு | 437-443 |
| 38 | மெய்மயக்கம் | 444-448 |
| 39 | ஒரு சொல் பல பொருள் | 449-454 |
| 40 | அகப்பொருள் புறப்பொருள் இலக்கணம் | 455-474 |
| 41 | கலைச் சொற்களை அறிதல் | 475-497 |

| | | |
|---|---|---|
| 42 | நிறுத்தற்குறி | 498-517 |
| 43 | பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு | 518-536 |
| 44 | பழமொழிகள் மொழி பெயர்ப்பு | 537-544 |
| 45 | யாப்பு இலக்கணம் | 545-611 |
| 46 | அணி இலக்கணம் | 612-645 |
| 47 | பொருள்கோள் | 646-659 |
| 48 | புணர்ச்சி | 660-727 |
| 49 | இணைப்புச்சொல் | 728-730 |
| 50 | சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல் | 731-732 |

# 2025 GROUP 4

# NEW SYLLABUS

# 1

# அடிப்படை தமிழ் எழுத்துக்கள்

**SOURCE:**

**6th New Tamil**

**6th Old Tamil**

**10th Tamil (2003-2008 Edition)**

www.tntextbooks.in

கற்கண்டு

# இயல் ஒன்று

# தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் மனிதன் உற்றுநோக்கினான். அவற்றின் இயல்புகளை அறிந்துகொண்டான். இவ்வாறே மொழியையும் ஆழ்ந்து கவனித்தான். மொழியை எவ்வாறு பேசவும் எழுதவும் வேண்டும் என்பதை வரையறை செய்தான். அந்த வரையறைகளே இலக்கணம் எனப்படும்.

தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து.

- எழுத்து இலக்கணம்
- சொல் இலக்கணம்
- பொருள் இலக்கணம்
- யாப்பு இலக்கணம்
- அணி இலக்கணம்



ஐந்துவகை இலக்கணம்

### எழுத்து

ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

### உயிர் எழுத்துகள்

உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன. வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.




**ஒலித்துப் பார்த்து உணர்வோம்!**


அ, இ, உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.



www.tntextbooks.in

• குறுகி ஒலிக்கும்




ஆகிய ஐந்தும் **குறில் எழுத்துகள்.**

• நீண்டு ஒலிக்கும்




ஆகிய ஏழும் **நெடில் எழுத்துகள்.**

ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு.

எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் என வகைப்படுத்துகிறோம்.

### மாத்திரை


*மாத்திரை* என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

• குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – *1 மாத்திரை*


• நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – *2 மாத்திரை*

### மெய்யெழுத்துகள்

மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.



வல்லினம்
க், ச், ட், த், ப், ற்



மெல்லினம்
ங், ஞ், ண், ந், ம், ன்



இடையினம்
ய், ர், ல், வ், ழ், ள்

மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு – *அரை மாத்திரை*

**ஒலித்துப் பார்த்து உணர்வோம்!**

- க், ச், ட், த், ப், ற் – ஆகிய ஆறும் வன்மையாக ஒலிக்கின்றன.
- ங், ஞ், ண், ந், ம், ன் – ஆகிய ஆறும் மென்மையாக ஒலிக்கின்றன.
- ய், ர், ல், வ், ழ், ள் – ஆகிய ஆறும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்றன.

### உயிர்மெய்

மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.

மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்.

### ஆய்த எழுத்து

தமிழ்மொழியில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி எழுத்து ஒன்றும் உள்ளது. அது ஃ என்னும் ஆய்த எழுத்தாகும்.

ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு
அரை மாத்திரை

# இலக்கணமும் மொழித்திறனும்

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

உயிரெழுத்து 12

மெய்யெழுத்து 18

உயிர்மெய் எழுத்து 216

ஆய்த எழுத்து 1 ஃ

மொத்தம் 247

க்+ஈ = கீ

க்+உ = கு

## அ. மொழி அறிவோம்

தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் முப்பது.
உயிர் எழுத்துகள் பன்னிரண்டு;
மெய் எழுத்துகள் பதினெட்டு;
ஆக மொத்தம் முப்பது.
பின்வரும் சொல்லைப் பாருங்கள்.

(எ.கா.) அண்ணா.
அ – உயிரெழுத்து
ண் – மெய்யெழுத்து
ணா – உயிரும் மெய்யும் சேர்ந்து வந்த உயிர்மெய் எழுத்து.

உயிரும் மெய்யும் சேர்ந்து 216 (இருநூற்றுப் பதினாறு) உயிர்மெய் எழுத்துகளை உருவாக்குகின்றன. ஆனால், அவை அனைத்தையும் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவது இல்லை.

எடுத்துக்காட்டாக, கி, சி, பி, டி, தி, மி – போன்ற உயிர்மெய் எழுத்துகள் அன்றாடப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுகின்றன.

ஙி, ஞி, ஙௌ, ஞௌ, ணௌ போன்றவை அவ்வாறு பயன்படுவது இல்லை.

அடிப்படையான தமிழ் எழுத்துகள் முப்பது மட்டுமே.

## ஆ. குறில் நெடில் உண்டாவது எப்படி ?

அ, இ, உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய்க்குறில் எழுத்துகள் உண்டாகின்றன.

கடல், கிளி, குரங்கு, சென்னை, சொல்

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஏழும் நெடில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய்நெடில் எழுத்துகள் உண்டாகின்றன.

காளை, கீற்று, கூடல், கேள்வி, கை, கோவில், கௌதாரி

குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுதுக.

பல் தேய்த்தேன்.

பால் குடித்தேன்.

பல், பால் இடம் மாறினால் குழப்பம் வரும்.

## V. இலக்கணம்

மாத்திரை

**எழுத்துகளை ஒலிப்பதற்கு ஆகும் கால அளவை 'மாத்திரை' என்று குறிப்பிடுவர்.**

உ, ஊ, க் இவ்வெழுத்துகளை ஒலித்துப் படிக்கவும்.

'உ'வை ஒலிப்பதற்கு நாம் எடுக்கும் நேரமும், இரண்டு விரல்களைச் (பெருவிரல், நடுவிரல்) சுண்டுவதற்கு ஆகும் நேரமும் ஒன்றாயிருப்பதைக் கவனிக்க. இக்கால அளவுக்கு ஒரு மாத்திரை எனப் பெயர். இயல்பாகக் கண் இமைத்தலுக்கும் (மூடித் திறத்தலுக்கும்) அதே அளவு நேரமாவதை கவனி. 'ஊ' வை ஒலிப்பதற்கு, முன்பு எடுத்த நேரத்தைப் போன்று இரு மடங்கு நேரம் ஆவதைக் கவனி.

குறுகிய ஒலியுடைய (குறில்) எழுத்துகளை ஒலிக்க ஆகும் நேரம் ஒரு மாத்திரை.

அ, இ, க, ச, கு.

நீண்ட ஒலியுடைய (நெடில்) எழுத்துகளை ஒலிக்க ஆகும் நேரம் இரண்டு மாத்திரை.

ஆ, கா, ஈ, போ.

மெய்யெழுத்துகளை ஒலிக்க ஆகும் நேரம் அரை மாத்திரை.

பட்டு – என்பதில் ட் – ஒலிக்க 1/2 மாத்திரை

கீழ்க்கண்டவற்றை ஒலிக்க ஆகும் மாத்திரை (நேரம்) அளவை எழுதுக.

க –

பா –

போ –

படம் –

தேர் –

## VI. *எண்களை எழுத்தால் எழுத அறிதல்*

ஐம்பதாயிரம் முதல் ஆயிரம் ஆயிரமாக ஒரு லட்சம் வரை எழுதிப் பழகுக.

ஐம்பதாயிரம், ஐம்பத்தோராயிரம் . . . . . ஒரு லட்சம்.

## VII. *கட்டுரை எழுதும் பயிற்சி*

கீழ் உள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி விடை எழுதுக.

# இலக்கணம்

## முதற்பகுதி

## I. எழுத்து

### அ) முன் வகுப்புகளில் கற்றவற்றின் சுருக்கம்

மாணாக்கரே! பத்தாம் வகுப்புப் பாடத்திட்டத்தின்படி இலக்கணம் கற்கப் புகும்முன், முன் வகுப்புகளில் கற்ற எழுத்திலக்கணப் பகுதியை நினைவு கூர்ந்து தொடர்ந்து செல்க.

பைந்தமிழ் இலக்கணம் ஐந்து வகை. அவை:

1. எழுத்து
2. சொல்
3. பொருள்
4. யாப்பு
5. அணி என்பனவாகும்.

**முதலெழுத்து**

'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிரெழுத்துகளும் 'க்' முதல் 'ன்' வரையுள்ள பதினெட்டு மெய்யெழுத்துகளும் ஆகிய முப்பதும் முதலெழுத்துகள் எனப்படும்.

'உயிரும் உடம்புமாம் முப்பது முதலே'

–நன்னூல் 59

மொழிக்கு உயிர் போன்றவை உயிரெழுத்துகள். உடல் போன்றவை மெய்யெழுத்துகள். இவை 216 உயிர் மெய்யெழுத்துகள் தோன்ற அடிப்படையாய் உள்ளன. இவ்வாறு



மொழிக்கு முதற்காரணமாய் விளங்குவதால் இவை முதலெழுத்துகள் என்று வழங்கப்படுகின்றன.

**மாத்திரை**

எழுத்துகள் ஒலிக்கப்படும் கால அளவுக்கு மாத்திரை என்று பெயர். நாம் இயல்பாகக் கண்ணிமைப்பதற்கு ஆகும் நேரம் அல்லது கைநொடிப்பதற்கு ஆகும் நேரம் ஒரு மாத்திரை ஆகும்.

எழுத்தின் சாரியை ஒலிக்கும்போது ஓசை இனிமைக்காகவும் எளிமைக்காகவும் சாரியை சேர்ந்து ஒலிக்கப்படும். கரம், காரம், கான், அகரம் என்பன எழுத்தின் சாரியைகள் ஆகும். எழுத்துகள் பெறும் சாரியைகள் குறித்துப் பின்னர்க் காண்போம்.

**உயிரெழுத்துகள் - 12**

| குறில் | | நெடில் |
|---|---|---|
| அ | – | ஆ |
| இ | – | ஈ |
| உ | – | ஊ |
| எ | – | ஏ |
| | – | ஐ(இ) |
| ஒ | – | ஓ |
| | – | ஔ(உ) |

உயிரெழுத்துகளில் குறுகிய ஓசையுடைய எழுத்துகள் குறிலெழுத்து அல்லது குற்றெழுத்து என்றும் நீண்ட ஓசையுடைய எழுத்துகள் நெடில் எழுத்து அல்லது நெட்டெழுத்து என்றும் வழங்கப்படும். குறிலெழுத்துகள் ஒவ்வொன்றையும் ஒரு மாத்திரை நேரத்திலும் நெட்டெழுத்துகள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரை நேரத்திலும் ஒலிக்க வேண்டும்.

குறிலெழுத்துகள் சற்று நீண்டு ஒலித்தே நெட்டெழுத்துகளாக மாறுகின்றன. எனவே ஒவ்வொரு நெட்டெழுத்திற்கும் அதற்குரிய குறிலெழுத்து இனவெழுத்தாகும். ஐ, ஔ ஆகிய இரு நெட்டெழுத்துகளுக்கும் தனியே குற்றெழுத்தின்மையால் ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனக்குறிலெழுத்தாகக் கொள்ளப்படும். உயிர்க் குற்றெழுத்துகள் கரம், காரம், கான், ஆகிய மூன்று சாரியைகளையும் பெறும்.

எ.கா.
அகரம்
அகாரம் அ
அஃகான்

உயிர் நெட்டெழுத்துகள் காரம் என்னும் சாரியை பெறும் ஐ ஔ ஆகிய இரண்டு நெட்டெழுத்துகளும், காரம் என்னும் சாரியை பெறுவதுடன் கான் சாரியையும் பெறும்.


எ.கா. ஆகாரம் – ஆ

ஐகாரம், ஐகான் – ஐ

ஔகாரம், ஔகான் – ஔ

**மெய்யெழுத்துகள் 18**

க ச ட த ப ற – வல்லினம்
ங ஞ ண ந ம ன – மெல்லினம்
ய ர ல வ ழ ள – இடையினம்






மெய்யெழுத்துகளில் வன்மையான ஓசையுடையவை வல்லினமென்றும், மென்மையான ஓசையுடையவை மெல்லினம் என்றும், அவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசையுடையவை இடையினமென்றும் வழங்கப்படும். அவற்றை முறையே வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்றுங் கூறுவர். ஒவ்வொரு வல்லின எழுத்திற்கும் அதனையடுத்து வரும் மெல்லின எழுத்து இனவெழுத்தாகும்.

எ.கா. க் என்பதற்கது இனம் ங்
ச் என்பதற்கு இனம் ஞ்

மெய்யெழுத்துகள் அகரம் என்னும் சாரியை பெறும்.

க
எ.கா க் + அகரம் = (க்+அ)கரம் = ககரம்

மெய்யெழுத்துகள் ஒவ்வொன்றும் அரை மாத்திரை நேரத்தில் ஒ-ப்புடையன.

# 2025 GROUP 4

# NEW SYLLABUS

## 2

# இன எழுத்துக்கள்

**SOURCE:**

**6th Old Tamil**

கற்கண்டு


## இயல் ஒன்று

# இன எழுத்துகள்

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும். ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.




(எ.கா.) திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்




இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.



மெய்யெழுத்துகளைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

(எ. கா.) ஓஒதல், தூஉம், தழீஇ

தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.

## V. இலக்கணம்

### இன எழுத்துகள்

எழுத்துகள் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு ஆகியவற்றுள் ஒன்று மற்றொன்றை ஏதேனும் ஒருவகையால் ஒத்திருப்பின் அவற்றை இன எழுத்துகள் என்பர்.

1. உயிர் எழுத்துகளுள் குற்றெழுத்துகளுக்கு நெட்டெழுத்து இன எழுத்தாகும்.

அ – ஆ
இ – ஈ
உ – ஊ
எ – ஏ
ஒ – ஓ

2. ஒலிக்கும்போது ஐ என்னும் உயிரெழுத்து இறுதியில் இ என்னும் உயிரெழுத்தையும், ஔ என்னும் உயிரெழுத்து இறுதியில் உ என்னும் உயிரெழுத்தையும் கொண்டு முடிதலினால் அவற்றுக்கு அவை இன எழுத்தாகும்.

ஐ – இ
ஔ – உ

3. வல்லினமெய், மெல்லின மெய்களை நெடுங்கணக்கு முறையில் வைக்கும்போது, இனவொலி அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளன. வல்லினமெய்கள் ஒவ்வொன்றுக்கும் மெல்லின மெய்கள் இனமாகும்.

க் – ங், ச் – ஞ், ட் – ண், த் – ந், ப் – ம், ற் – ன் என அமையும்.

ங் மெய்யை அடுத்து அதன் இனமாகிய க வருக்கம் (க, கா, கி, கீ, கு ..) வரும்.
தங்கம், பங்கு, தங்கி.

ஞ் மெய்யை அடுத்து அதன் இனமாகிய ச வருக்கம் (ச, சா, சி, சீ, சு .. ) வரும்.
பஞ்சம், இஞ்சி, பஞ்சு

ண் மெய்யை அடுத்து அதன் இனமாகிய ட வருக்கம் (ட, டா. டி, டீ, டு ..) வரும்.
வண்டி, சண்டை, கண்டேன் – இதனை ட ண்ணகரம் என்பர்.

ந் மெய்யை அடுத்து அதன் இனமாகிய த வருக்கம் (த, தா,தி, தீ, து ..) வரும்.
தந்தான், கந்தன், தந்தி - இதனை த ந்நகரம் என்பர்

ம் மெய்யை அடுத்து அதன் இனமாகிய ப வருக்கம் (ப, பா, பி, பீ, பு ..) வரும்.
பம்பரம், தம்பி, அம்பு.

ன் மெய்யை அடுத்து அதன் இனமாகிய ற (ற, றா, றி, றீ, று .. ) வருக்கம் வரும்.
கன்று, நன்றி, தின்றான் – இதனை ற ன்னகரம் என்பர்

# 2025 GROUP 4
# NEW SYLLABUS

# 3

# சுட்டெழுத்துக்கள்

**SOURCE:**

**6th New Tamil**
**6th Old Tamil**
**6th Tamil (2003-2008 Edition)**

கற்கண்டு

# இயல் மூன்று

# சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்

## சுட்டு எழுத்துகள்

அவன், இவள், அங்கு, இங்கு, அந்த, இந்த ஆகிய சொற்களைக் கவனியுங்கள். அவை ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு சுட்டிக்காட்டுவதற்கு அச்சொற்களின் முதலில் அமைந்துள்ள அ, இ ஆகிய எழுத்துகளே காரணம் ஆகும்.

இவ்வாறு ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்.

அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால், இன்று 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

### அகச்சுட்டு

இவன், அவன், இது, அது - இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை. இவ்வாறு, சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே (அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும் .

### புறச்சுட்டு

அவ்வானம்-இம்மலை-இந்நூல்-இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

### அண்மைச்சுட்டு

இவன், இவர், இது, இவை, இம்மரம், இவ்வீடு - இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இஃது அண்மைச்சுட்டு எனப்படும். அண்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'இ' ஆகும்.

### சேய்மைச்சுட்டு

அவள், அவர், அது, அவை, அவ்வீடு, அம்மரம் – இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இது சேய்மைச்சுட்டு எனப்படும். சேய்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'அ' ஆகும்.

**தெரிந்து தெளிவோம்**

அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட 'உ' என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(எ.கா.) உது, உவன்

### சுட்டுத்திரிபு

அம்மரம், இவ்வீடு ஆகியவை புறச்சுட்டுகள் என்பதை அறிவோம். இச்சொற்களை அந்த மரம், இந்த வீடு என்றும் வழங்குகிறோம்.

அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் மாற்றம் பெற்று (திரிந்து) அந்த, இந்த என வழங்குகின்றன.

இவ்வாறு, அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும்.

### புறவினா

அவனா? வருவானோ? இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.

இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருவது புறவினா எனப்படும்.

## இலக்கணமும் மொழித்திறனும்

### I. ஒவ்வோர் எழுத்துக்கும் ஒரு பணி

"யார் இதனை உடைத்தது ?"

"இவன்"

–இந்த உரையாடல் நம் வீட்டுக்குள் அடிக்கடி நடக்கிறது.

அவன், அவள், அவர், இவன், இவள், இவர், அது, இது, அவை, இவை என்னும் சொற்கள், குறிப்பிட்ட மனிதரையோ பொருளையோ சுட்டிக்காட்ட உதவுகின்றன. இப்படிச் சுட்டிச்சொல்ல உதவும் எழுத்துகள் இரண்டு. அவை அ, இ.

இவற்றைச் சுட்டெழுத்துகள் என்கிறோம். பழங்காலத்தில் 'உ' என்பதும் சுட்டெழுத்துதான். 'உ' எழுத்து, பல பணிகளைச் செய்தது.

உதுக்காண் என்றால், 'சற்றுத் தொலைவில் பார்' என்பது பொருள்.

உப்பக்கம் என்றால், 'முதுகுப்பக்கம்' என்பது பொருள்.

உம்பர் என்றால், 'மேலே' என்பது பொருள்.

இப்பொழுது, சுட்டிச்சொல்ல நாம் 'உ' எழுத்தைப் பயன்படுத்துவது இல்லை.

அவன், இவன், அது, இது எனச் சுட்டுவது ஒருமுறை.

அப்பையன்

இப்பெண்

இவ்வீடு

என்றும் சுட்டுவோம். என்ன வேறுபாடு ? அவன், அவள் என்னும் சுட்டுச்சொற்கள் ஆணா, பெண்ணா என்பதனையும் சுட்டிச் சொல்லிவிடுகின்றன.

அ, இ சுட்டெழுத்துகள் தனியே நின்று சுட்டும்போது, ஆண் பெண் அனைவரையும் பொதுவாகச் சுட்டுகின்றன.

அது, இது, அந்த, இந்த, அங்கு, இங்கு என்னும் சுட்டுச்சொற்களே இன்று பெருவழக்காகிவிட்டன.

அந்தப்பக்கம்

இந்தவீடு

பயிற்சி

வினாக்களுக்குச் சுட்டுச்சொற்கள் இட்டு, விடை எழுதுக.

எது உன் வீடு ?

____________ என் வீடு.

யார் உன் அண்ணன் ?

____________ என் அண்ணன்.

உன் பள்ளிக்கூடம் எங்கு உள்ளது ?

என் பள்ளிக்கூடம் ____________ பக்கம் உள்ளது.

## II. எ, யா, ஆ, ஓ, ஏ.

அவன் செய்தான்.

அவனா செய்தான்.

இரண்டு தொடர்களுக்கும் என்ன வேறுபாடு ?

முதல் தொடர், ஒரு செய்தி மட்டுமே.

இரண்டாவது தொடர் ஒரு வினாவை எழுப்புகிறது.

செய்தியை வினா ஆக்கிய எழுத்து எது ?

ஆ

நாம் ஏராளமாய்க் கேள்விகளைக் கேட்க ‘ஆ’ உதவுகிறது.

நீயா ? நானா ?

இன்று பள்ளியா ? விடுமுறையா ?

வினா எழுப்புவதற்கு வேறுசில எழுத்துகளும் உள்ளன.

அவை: எ, ஏ, யா, ஓ.

- விடை என்ன ?
- ஏன் வந்தாய் ?
- யார் அங்கே ?
- நீயோ செய்தாய் ?

## III. ‘ஏ’ எழுத்துக்கு இன்னுமொரு பணி

‘ஏ’ எழுத்து, வினா கேட்க மட்டும் பயன்படுவது இல்லை. அழுத்தம் கொடுத்துச் சொல்லவும் பயன்படுகிறது.

அவன் செய்தான்.

அவனே செய்தான்.

இரண்டாவது சொற்றொடரில் அழுத்தம் ஏற்படக் காரணமானது, ‘ஏ’.

சீதையே சிறந்தவள்.

உணவே மருந்து.

இப்பொழுது, 'ஏ'க்கு மாற்றாகத் 'தான்'பயன்படுத்தும் வழக்கமும் இருக்கிறது.

அவன்தான் முதலில் வருவான்.

சீதைதான் சிறந்தவள்.

### IV. பயிற்சி

**1. பின்வரும் சொற்றொடர்களை வினாச் சொற்றொடர்களாக மாற்றுக.**

அ. பாண்டியன் நல்லவன்.

ஆ. அப்துல்லா வீட்டுக்கு வந்துவிட்டார்.

இ. கடல் பெரியது.

**2. பொருத்தமான வினாச்சொற்களை எழுதுக.**

அ. என் வினாவுக்கு விடை ________ ?

ஆ. சுற்றுலாவுக்குப் பெயர் கொடுத்திருப்பவர்கள் ________ ?

இ. உனக்குப் பிடித்த பொருள் ________ ?

### V. அகரமுதலி காணும் பயிற்சி

அகரமுதலியைப் பார்த்து எழுத்துகளின் வரிசையை நாம் அறிதல் வேண்டும். 'அ' வில் தொடங்கும் தமிழ் உயிரெழுத்துகளின் வரிசை உங்களுக்குத் தெரியும் அல்லவா? அப்படியானால், கீழ்க்காணும் சொற்களை வரிசைப்படுத்தி எழுதுக.

ஏழை, உலகம், ஔவை, அன்பு, எருது, ஆசை, ஓவியம், ஈட்டி, இளைஞன், ஒன்று, ஊக்கம், ஐம்பது.

| | |
|---|---|
| 1. அன்பு | 7. ____________ |
| 2. ____________ | 8. ____________ |
| 3. ____________ | 9. ____________ |
| 4. ____________ | 10. ____________ |
| 5. ____________ | 11. ____________ |
| 6. ____________ | 12. ____________ |

## V. இலக்கணம்

நம் எண்ணங்களைப் பிறர் அறியவும், பிறர் எண்ணங்களை நாம் அறியவும் உதவுவது மொழி. மொழியைத் திருத்தமாகப் பேச, எழுதத் துணை புரிவது இலக்கணம். இலக்கணம் மொழியின் அமைப்பையும் அழகையும் உணர்த்துகிறது.

அமுதன் ஆறாம் வகுப்பு படிக்கிறான். அவன் மிக நல்லவன். இத்தொடர்களில் அமுதன் என்ற சொல்லில் 'அ' ஓர் எழுத்தாக உள்ளது. அவன் என்ற சொல்லில் 'அ' ஓர் எழுத்தாக அமைவதோடு அமுதனைச் சுட்டியும் காட்டுகிறது. எனவே 'அ' சுட்டெழுத்து எனப்படும்.

அ, இ என்னும் எழுத்துகள் சுட்டுப் பொருளைத் தரும்பொழுது அவை சுட்டெழுத்துகளாம். உ என்னும் எழுத்து பழங்காலத்தில் சுட்டெழுத்தாகப் பயன்பட்டது. தற்போது அது பேச்சு வழக்கில் இல்லை.

அவன், இவன், அவள், இவள், அவர், இவர் – இச்சொற்களிலுள்ள சுட்டெழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தாரா. இவ்வாறு சொல்லின் அகத்தே நின்று சுட்டுப் பொருளைத் தருவது 'அகச் சுட்டு' எனப்படும்.

அவ்வீடு, அக்குதிரை, இவ்வீடு, இம்மனிதன் – இச்சொற்களிலுள்ள சுட்டெழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு சொல்லின் புறத்தே நின்று சுட்டுப் பொருளைத் தருவது 'புறச் சுட்டு' எனப்படும்.

அவன், அவள், அது, அவர், அவை, அவ்வீடு, அக்குடிசை இச் சொற்களிலுள்ள '*அ*' என்னும் சுட்டு தொலைவில் உள்ளதைச் சுட்டும். எனவே இது 'சேய்மைச் சுட்டு' எனப்படும்.

இவன், இவள், இது, இக்கரடி, இப்பசு -- இச்சொற்களிலுள்ள '*இ*' என்னும் சுட்டெழுத்து அருகில் உள்ளதைச் சுட்டும். ஆகவே இது 'அண்மைச் சுட்டு' எனப்படும்.

அந்த மனிதன், இந்தப் பையன், அந்தப் புத்தகம், இந்தக் குதிரை – இச்சொற்களிலுள்ள அ, இ என்னும் சுட்டெழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து வழங்குவதனைச் 'சுட்டுத் திரிபு' என்பர்.

சுட்டெழுத்து என்றால் என்ன என்பதையும் அகச் சுட்டு, புறச் சுட்டு, சுட்டுத் திரிபு என்பனவற்றையும் அறிந்தோம்.

கீழ் உள்ள வாக்கியங்களில் அகச் சுட்டு, புறச் சுட்டு, சுட்டுத் திரிபு அமைந்த சொற்களை எடுத்து எழுதுக.

ஓர் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு நாயை வளர்த்து வந்தார். அந்த நாய்க்கு அவரிடத்தில் அதிக அன்பு உண்டு. அந்தச் செல்வர் அதை நன்றாகப் பழக்கி இருந்தார். ஆகையால், அது, அவர் சொற்படி நடந்து அச்செல்வருக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது.

## V. இலக்கணம்

'விருந்து ஆளுக்கா? ஆடைக்கா?' என்னும் வாக்கியத்தில் 'ஆளுக்கு', 'ஆடைக்கு' ஆகிய சொற்களின் பின்னால் ஆ சேர்ந்து வினாப் பொருள் தந்தது.

'எந்த எழுத்து சேர்ந்தது?' என்று கேட்கும்பொழுது 'எந்த' என்பதில் 'எ' என்பது வினாப் பொருளைத் தந்தது. இவ்வாறு வினாப் பொருளைத் தரும் எழுத்துகள் வினா எழுத்துகளாம். அவை எ, யா, ஆ, ஓ, ஏ என்பனவாம்.வினா எழுத்துகள் அமைந்த சொற்கள் வினாச் சொற்கள் எனப்படும். 'எங்கு? எது? எப்படி? யார்? யாவை? யாது?' இச்சொற்களிலுள்ள எ, யா, என்னும் எழுத்துகள் சொற்களின் முதலில் நின்று வினாப் பொருளைத் தருகின்றன. 'அதுவா ? அவனோ ?' இச்சொற்களில் ஆ, ஓ என்னும் எழுத்துகள் சொல்லின் இறுதியில் நின்று வினாப் பொருளைத் தருகின்றன.

'ஏன் ? , அவனே ?' ஆகிய சொற்களில் 'ஏ' என்னும் எழுத்து முறையே முதலிலும் ஈற்றிலும் நின்று வினாப்பொருளைத் தருகின்றது. தற்காலத்தில் ஏ சொல் ஈற்றில் நின்று வினாவாதல் வழக்கொழிந்தது.

'எது, யார், ஏன்' – இச் சொற்களிலுள்ள வினா எழுத்துகளாகிய எ, யா, ஏ முதலிய எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தரா. இவ்வாறு சொல்லின் உள்ளே (அகத்தே) நின்று வினாப் பொருளை உணர்த்துவது 'அக வினா' எனப்படும்.

'எப்பொருள் ? அவனா ? அவனே ? நீதானோ ?' - இச் சொற்களிலுள்ள வினா எழுத்துகளாகிய எ, ஆ, ஏ, ஓ என்னும் எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் தனிச் சொல்லாக நின்று பொருள் தருகின்றன. ஆகவே சொல்லின் புறத்தே நின்று வினாப் பொருளை உணர்த்துவது 'புறவினா' எனப்படும்.

கீழ் உள்ள தொடர்களில் அமைந்த வினாச் சொற்களை அகவினா, புறவினா என வகைப்படுத்தி எழுதுக.

1. மாணிக்கம் தடுத்து நிறுத்தப்பட்டது ஏன் ?
2. எவ்விதச் சட்டை அணிந்ததால் மாணிக்கம் வரவேற்கப்பட்டார் ?

# 2025 GROUP 4

# NEW SYLLABUS

# 4

# மொழி முதல் இறுதி எழுத்துக்கள்

**SOURCE:**

**6th New Tamil**

**11th New Tamil**

கற்கண்டு

**இயல் மூன்று**

# மொழி முதல், இறுதி எழுத்துகள்

நம் தமிழ் மொழியின் சொற்கள் நாம் எளிதாக ஒலிக்கும் வகையில் உருவானவை. வேற்று மொழிச்சொற்களைப் பேசுகையில் நமக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது. நம் மொழியின் சொற்களின் இயல்பையும் மரபையும் அறிந்து கொள்வது தேவையானது. சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் எந்தெந்த எழுத்துகள் வரும் என்பதை அறிந்து கொள்வதால் மொழியை நன்கு பேசமுடியும்.


கீழே உள்ள சொற்களைக் கவனியுங்கள்.

நன்றி ணன்றி னன்றி

இவற்றுள் நன்றி என்பதே சரியான சொல் அல்லவா?

பிழையின்றி எழுத எந்தெந்த எழுத்துகளை எங்கெங்குப் பயன்படுத்த வேண்டும் என்று அறிந்துகொள்வதும் மிக இன்றியமையாதது.

தமிழ் எழுத்துகளின் வகை, தொகை பற்றி அறிந்து கொண்டோம். அவற்றுள் எல்லா எழுத்துகளும் எல்லா இடங்களிலும் வருவதில்லை. சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் எழுத்துகள் பற்றித் தெரிந்துகொள்வோம்.



## மொழி முதல் எழுத்துகள்

மொழி என்பதற்குச் சொல் என்னும் பொருளும் உண்டு. சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை மொழிமுதல் எழுத்துகள் என்பர்.

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
- க, ச, த, ந, ப, ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.
- ங - வரிசையில் 'ங' என்னும் ஓர் எழுத்து மட்டுமே சொல்லில் முதல் எழுத்தாக வருகிறது. எ.கா- ஙனம்

  * (இக்காலத்தில் ஙனம் என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது.)

> (எ. கா.) க - வரிசை எழுத்துகள்
> கடல், காக்கை, கிழக்கு,
> கீற்று, குருவி, கூந்தல்,
> கெண்டை, கேணி, கைகள்,
> கொக்கு, கோலம், கௌதாரி.

- ஞ - வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ய - வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ ஆகிய ஆறு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- வ - வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ ஆகிய எட்டு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

## மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்

- மெய்யெழுத்துகள் பதினெட்டும் சொல்லின் முதலில் வாரா.
- ட,ண,ர,ல,ழ,ள,ற,ன ஆகிய எட்டு உயிர்மெய் எழுத்துகளின் வரிசையில் ஓர் எழுத்து கூடச் சொல்லின் முதலில் வராது.
- ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.
- ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் மொழி முதலில் வருவதாகக் குறிப்பிடப்பட்ட எழுத்துகள் தவிர பிற எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா.

> டமாரம், ரம்பம், லண்டன். ஃப்ரான்ஸ், டென்மார்க், போன்றவை பிறமொழிச் சொற்கள். இவற்றைத் தமிழில் ஒலி பெயர்த்து எழுதுகிறோம்.

## மொழி இறுதி எழுத்துகள்

சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்பர்.

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே மொழி இறுதியில் வரும்.
- ஞ், ண், ந், ம், ய் ,ர், ல், வ், ழ், ள், ன் ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழியின் இறுதியில் வரும். (உரிஞ், வெரிந், அவ்)

## மொழி இறுதியாகா எழுத்துகள்

- சொல்லின் இறுதியில் உயிரெழுத்துகள் தனித்து வருவதில்லை.

> - உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே சொல்லின் இறுதியில் வரும்.
> - அளபெடை எழுத்துகளில் இடம் பெறும் போது உயிர் எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும்.

- ஆய்த எழுத்து சொல்லின் இறுதியில் வராது.
- க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
- உயிர்மெய் எழுத்துகளுள் 'ங' எழுத்து வரிசை சொல்லின் இறுதியில் வராது.

> கார்த்திக், ஹாங்காங், சுஜித், மார்க்கெட், திலீப், மார்ச் போன்ற பிறமொழிப் பெயர்ச்சொற்களில் இவ்வெழுத்துகள் இறுதி எழுத்துகளாக இடம்பெறுவதுண்டு.

- எகர வரிசையில் கெ முதல் னெ முடிய எந்த உயிர்மெய் எழுத்தும் மொழி இறுதியில் வருவதில்லை.
- ஒகர வரிசையில் நொ தவிர பிற உயிர்மெய் எழுத்துகள் மொழி இறுதியில் வருவதில்லை.

நொ என்னும் எழுத்து ஓரெழுத்து ஒரு மொழியாகத் துன்பம் என்னும் பொருளில் வரும்

## சொல்லின் இடையில் வரும் எழுத்துகள்

- மெய் எழுத்துகள் பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.
- உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.
- ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

> அளபெடையில் மட்டுமே உயிர் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.
>
> அளபெடை பற்றி உயர் வகுப்புகளில் அறிந்துகொள்வீர்கள்.

இனிக்கும் இலக்கணம்

இயல் 1

# மொழி முதல், இறுதி எழுத்துகள்

சொற்கள் எழுத்தொலிகளால் ஆனவை. அவை நாம் ஒலிப்பதற்கு இனிமையாகவும் எளிமையாகவும் இருக்கவேண்டும். இதற்குச் சொற்களின் முதலிலும் இறுதியிலும் ஒலிக்கும் எழுத்தொலிகள் காரணமாக அமைகின்றன. சொற்புணர்ச்சியில், முதற்சொல்லின் இறுதி எழுத்தும் வரும் சொல்லின் முதல் எழுத்துமே சந்திக்கின்றன. அவ்வாறு சந்திக்கும் இடத்தில் வரும் எழுத்துகள் எவைஎவையென அறிந்துகொள்ள வேண்டும்.

காவிரி, டமாரம், றெக்கை, பாவை, ராக்கி, கோதை, டப்பா போன்ற சொற்களில் தமிழ்ச்சொற்கள் எவை என்பதை அறிய முடிகிறதா ?

இவற்றுள் காவிரி, பாவை, கோதை ஆகியவை தமிழ்மொழிச் சொற்களாக உள்ளன. டமாரம், றெக்கை, ராக்கி, டப்பா ஆகியவை பிறமொழிச்சொற்களாக உள்ளன. எனவே, சொற்களில் தமிழ்மொழிக்கு உரியவை, பிறமொழிக்கு உரியவை எவைஎவை என்பதை அறிந்து பயன்படுத்த வேண்டும். இதற்குச் சொற்களில் எழுத்துகளின் வருகை குறித்து அறிந்து கொள்ளவேண்டும்.

### மொழிமுதல் எழுத்துகள் – 22

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
2. மெய்யெழுத்துகள் தனிமெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.
3. மெய்களில் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாகச் சொல்லின் முதலில் வரும்.

(ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும் ),

4. ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை.
5. ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

> குறள் என்ற சொல்லை க்+உ+ற்+அ+ள் எனப் பிரிக்கலாம். சொல்லின் முதலில் உள்ள 'கு' என்னும் உயிர்மெய் எழுத்தை, க்+உ எனப் பிரிக்கும்பொழுது க் என்ற மெய்யெழுத்தே சொல்லின் முதலில் வருவதை அறியலாம்.

'ங்' என்னும் மெல்லின மெய் 'விதம்' எனப் பொருள் தரும் 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும். இந்தச் சொல்லும் தனியாக வராது. அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும் எ, யா என்னும் வினா எழுத்துகளுடனும் இணைந்து அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்று வரும். தற்காலத் தமிழில் இவற்றின் பயன்பாடு அரிதாகவே உள்ளது.

> உங்ஙனம் என்பது தற்பொழுது தமிழகத்தில் வழக்கில் இல்லை. ஆனால், தமிழ்இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்விலக்கண வரையறைகள் அனைத்தும் எழுத்து மொழிக்கானவையே அன்றி, பேச்சு மொழிக்கானவை அல்ல. மேற்காட்டிய 22 எழுத்துகள் நீங்கலாக உள்ள பிற எழுத்துகள், சொல்லின் முதலில் வந்தால் அவை தமிழ்ச் சொற்களாக இருக்கமாட்டா; பிறமொழிச் சொற்களாகவோ அல்லது ஒலிபெயர்ப்புச் சொற்களாகவோ இருக்கின்றன.

| மொழிமுதல் எழுத்துகள் | உயிரெழுத்து | மெய்யெழுத்து | மொத்தம் |
|---|---|---|---|
| | 12 | 10 | 22 |

## மொழி இறுதி எழுத்துகள் – 24

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்.
2. மெய்களில் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினோரெழுத்தும் சொல்லின் இறுதியில் வரும்.
3. க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
4. பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக்கொள்வர்.

ஞ் ந் வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன. ஆயினும், இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.

| மொழி இறுதி எழுத்துகள் | உயிரெழுத்து | மெய்யெழுத்து | குற்றியலுகரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | 12 | 11 | 1 | 24 |

## புணர்ச்சி

நாம் பேசும்போது சில சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி ஒருசொல் போலவே பேசுகிறோம். எழுதும்போதும் அவ்வாறே எழுதுகிறோம். தமிழரசி, நாட்டுப்பண் ஆகிய இச்சொற்கள் ஒருசொல் வடிவம் உடையன. ஆயினும், இவை இரண்டு சொற்களின் சேர்க்கையாக உள்ளன.

தமிழ் + அரசி - தமிழரசி நாடு + பண் - நாட்டுப்பண்

இவற்றில் முதலில் நிற்கும் சொல்லை 'நிலைமொழி' என்றும் அதனோடு வந்து சேரும் சொல்லை 'வருமொழி' என்றும் அழைப்பர். இவ்வாறு நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் புணர்ச்சி என்பர். நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் புணர்ச்சிக்கு உரியன ஆகும்.

## உயிரீறு, மெய்யீறு

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது 'உயிரீறு' எனப்படும். நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்.

மணி (ண் + இ) + மாலை = மணிமாலை – உயிரீறு; பொன் + வண்டு = பொன்வண்டு – மெய்யீறு

## உயிர்முதல், மெய்ம்முதல்

வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும். வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது 'மெய்ம்முதல்' எனப்படும்.

வாழை+இலை = வாழையிலை– உயிர்முதல்; தமிழ் + நிலம்(ந்+இ) = தமிழ்நிலம் – மெய்ம்முதல்